## அரசியல் கட்சிகளின் வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்களின் வகிபாகம்

தேர்தலொன்றை சுதந்திரமானதாகவும் நீதியானதாகவும் நடாத்துவது போன்றே. அத்தகையதொரு தேர்தலின் பெறுபேற்றின் செல்லுபடியான தன்மையும் அரசியல் கட்சிகளினதும் வேட்பாளர்களினதும் ஆதரவாளர்களினதும் சிறந்த நடத்தையும் கட்டாயமானதாகும். அதன் காரணமாக, தேர்தல் நடைபெறும் தினத்திலும் தேர்தலுக்குப் பிந்திய கட்டத்திலும் வன்செயல்களை விட்டும் தவிர்ந்திருப்பதன் மூலம் தமதும் ஏனையோரதும் வெற்றி தோல்வியை ஒன்றுபோலவே அனுபவிக்குமாறு தயவுடன் வேண்டுகின்றோம். அதேபோல், நாளை நடைபெறவுள்ள தேர்தலில் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள் தாம் நியமிக்கப்பட்டுள்ளது, தமது பிரதேசத்தின் மக்களின் வாக்குகளினால் என்பதையும் அவர்கள் சார்பாக கைவிட முடியாத பொறுப்பு சுமத்தப்பட்டுள்ளது என்பதையும் நன்கு மனதில் பதிய வைத்துக்கொள்ள வேண்டும். அதேபோல், நீங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளது, உங்களுக்கு வாக்களித்த மக்கள் சார்பாக மாத்திரம் அல்ல என்பதையும் வலியுறுத்திக் கூற வேண்டி இருப்பதற்குக் காரணம், இதற்கு முன்னர் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களில் அநேகமானவர்களின் கடந்த கால நடத்தைகள் அந்தளவு சிறந்தவையாக இல்லாமல் இருப்பதே. அதேபோல், தேர்தலுக்குப் பிந்திய காலகட்டத்தில் எந்த ஒரு வேட்பாளரும் எந்த ஒரு சட்டவிரோத செயல் அல்லது வன்செயலுக்கும் தமது கட்சியினரைத் தூண்டாமல் இருப்பர் என்றும் நாம் எதிர்பார்க்கின்றோம்.

## வாக்காளரின் வகிபாகம்

உங்கள் கிராமத்தின்/நகரத்தின் அபிவிருத்தி, நல்லாட்சி என்பவற்றைக் கருத்திற்கொண்டு நீங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும்போது பின்வரும் விடயங்கள் மீது கவனம் செலுத்தி, சிறந்த புரிந்துணர்வுடனும் பொறுப்புடனும் உங்கள் பெறற்கரிய வாக்கைப் பயன்படுத்துமாறும் நாம் வேண்டுகின்றோம்:

1. ஜனநாயகத்தைப் பாதுகாக்காத, காடைத்தனத்தில் ஈடுபடும், ஊழல் மோசடிகளுடன் சம்பந்தப்பட்ட, குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள, மக்கள் சொத்துக்களைச் சூறையாடும் வேட்பாளர்களை இரண்டு முறை சிந்திக்காமலே ஒதுக்கிவிடுமாறு வேண்டுகிறோம்.

2. தேர்தல் சட்டத்தை அல்லது நாட்டில் அமுலிலுள்ள சட்டத்தை மீறி தமது பிரச்சார நடவடிக்கைகளை முன்னெடுக்கும் வேட்பாளர்கள் அதிகாரத்துக்கு வருவார்களாயின், தமது பதவிவழி அதிகாரத்தை தமது சொந்த நலனுக்குப் பயன்படுத்துவார்கள் என்பதற்கான முன்மாதிரியொன்றை ஏற்கனவே வழங்கியுள்ளதாகக் கருதுங்கள்.

3. இனம், மதம், சாதி, பால்நிலை முதலிய அம்சங்களின் அடிப்படையில் தூண்டிவிடும் கூற்றுக்களைத் தெரிவிப்பவர்களை நிராகரித்து விடுங்கள்.

4. உள்ளூராட்சி மன்றங்களுக்கு ஏற்புடையதாகாத யோசனைகளும் ஆர்ப்பாட்டக் கோசங்களும் வழியே உங்களை வழிதவற விட முயற்சிப்பவர்களை நிராகரித்து விடுங்கள்.

5. உங்கள் பிரதேசத்திலுள்ள வளங்களை நன்கறிந்த, தேவைகள் குறித்த கூருணர்வுள்ள வேட்பாளர்களையே நீங்கள் தெரிவு செய்யுங்கள்.

6. இம்சையும் மோசடிச் செயல்களும் அற்ற பாத்திரங்களாக இனங்காணப்பட்ட வேட்பாளர்களையே நீங்கள் தெரிவு செய்யுங்கள்.

தேர்தல் நடைபெறும் தினத்தன்று மிகவும் அமைதியான முறையில் நடந்துகொள்ளுமாறும், தேவையற்ற மோதல்களில் ஈடுபடாமல் இருக்குமாறும் வாக்களித்த பின் வாக்குச்சாவடிக்கு அருகில் நடமாடாமல் இருக்குமாறும் நாம் உங்களிடம் விநயமாக வேண்டுகின்றோம்.

தேர்தல் நடைபெறும் தினத்தன்று அல்லது தேர்தலுக்குப் பிந்திய கட்டத்தில் இடம்பெறும் முறைகேடுகளுடன் தொடர்புபட்ட ஆட்கள், நிறுவனங்கள் குறித்து பெவ்ரல் இயக்கத்திற்கு அறிவிக்குமாறும் தயவுடன் வேண்டுகின்றோம். அது தொடர்பான தொலைபேசி இலக்கங்களும் பெக்ஸ் இலக்கங்களும் பின்னிணைப்பு 02 இல் தரப்பட்டுள்ளன.